செய்தி வெளியீடு எண்: 35 நாள்: 19.09.2019.

**தேனி மாவட்டம்**

**எட்டப்பராஜபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 100 பயனாளிகளுக்கு ரூ.14.45 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்:-**

******

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கண்டமனூர் உள்வட்டத்திற்குட்பட்ட எட்டப்பராஜபுரம் கிராமத்தில் (19.09.2019) இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 100 பயனாளிகளுக்கு ரூ.14.45/- இலட்சம் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கி, தெரிவித்ததாவது.

மக்கள் தொடர்பு முகாம் என்பது அரசுத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து மாவட்டத்தில் ஒரு கிராமத்தை தேர்வு செய்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து, தகுதி வாய்ந்த பயனாளிகளை பயன்பெற செய்வதே இம்மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும்.

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிடப்பட்டதன் . அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 12 சிறுபாசன குளங்கள், 167 ஊரணிகள் சீரமைக்கும் பணிகளும் அரசின் அறிவுறுத்தலின்படி மேற்கொள்ளப்பட்டு, நீர்நிலைகள் மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கெள்ளப்பட்டு, பருவமழை காலங்களில் பெறப்படும் மழை நீரினை சேமித்து, நிலத்தடி நீர் மட்டும் உயர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

வீட்டுமனைப்பட்டா மற்றும் வீட்டுமனை வேண்டி, பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்கள் அளித்து வருகின்றனர். தகுதியுடைய நபர்கள் பயன்பெறும் வகையில் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு 2,800-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, மேலும், 1,000 நபர்களுக்கு வீடுகள் கட்டிதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காக தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் ஒரு கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, பொது ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்து வருகிறது. மேலும், பொதுமக்கள் தங்களின் குடியிருப்புகளில் கழிப்பறைக்கு தேவையான இட வசதி இருந்தால் தனிநபர் கழிப்பறை உருவாக்கிடவும் ரூ.12,000/- அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்களது சுற்றுப்புறச் சூழல்களான நீர், நிலம், காற்று இவற்றை மாசில்லாமல் வைத்திட வேண்டும்.

*மேலும், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட சில பகுதிகளை குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் வைகை கூட்டு குடிநீர் திட்டத்தில் இணைத்து, குடிநீர் வழங்கிடவும் மற்றும் சில பகுதிகளில் தடுப்பணைகள் அமைத்திடவும் முன்னதாகவே, அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின் முறையான அனுமதி மற்றும் நிதி கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் மேற்கண்டவைகள் தொடர்பாக தீர்வு காணப்படும். அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து, துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் எடுத்துரைத்தை, பொதுமக்கள் கருத்தில் கொண்டு, அத்திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில், வருவாய்த்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் உள்ளிட்ட துறைகளின் சார்பில் மொத்தம் 100 பயனாளிகளுக்கு ரூ.14.45 மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.*

*இம்முகாமில், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.பி.ராமர், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) (பொ) எம்.முருகசெல்வி மற்றும் துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள், வட்டாட்சியர் சந்திரசேகரன், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***